ரெஜிஸ்டர் நெ. M. 3855.

# கிராமப் பஞ்சாயத்து பத்திரிகை

Vol. 4. ஏப்ரல், 1941 நெ. 1


## எடிடோரியல் கமிட்டி.

ஸ்ரீமான்கள்

1. கனம் ஸ்ரீ வி. ராமதாஸ் பந்துலு, பி.ஏ., பி.எல்.,
2. டி. ஏ. ராமலிங்கம் செட்டியார், பி.ஏ., பி.எல்., எம்.எல்.ஸி.
3. வி. விய்யன்ன, பி.ஏ., பி.எல்., எடிடர்.


---

சென்னை மாகாண பஞ்சாயத்து போர்டுகளின் யூனியன்

டெலிபோன் நெ. 86166.





கிராம பஞ்சாயத்து போர்டின் கடமை.

கிராமத்தின் சௌகரியத்துக்காக கிராம ஜனங்களின் சரீர ஆரோக்கியம் அவசியம். ஆகையால் சகல வியாதி நிவாரணியாயிருக்கும்

அம்ருதாஞ்சனத்தை

கிராமத்திலேயே இருக்கும்படியாய் பார்த்துக் கொள்ளவேண்டும்.

# பொருள் அடக்கம்.


1. தலையங்கம்—

மீன்கள் குத்தகையின் விற்பனை, வசூல் சரிசெய்தல் ... 1

பஞ்சாயத்து காரியதரிசிகளும் ஸ்திர முன்பணமும் ... 3

ஸர்குலர் நெ. 572,—ரஸ்தாக்கள் ... ... 4

2. அரிசி ... ... 5

3. செய்தித் திரட்டு ... ... 13

4. உங்களுக்குத் தெரியுமா? ... ... 13

5. பஞ்சாயத்து செய்திகள் ... ... 15

6. அரசாங்க உத்திரவுகள் ... ... 16



## தென் இந்தியா கோவாபரேடிவ் இன்ஷியூரன்ஸ் ஸொஸைடி, லிமிடெட்.

(1932ஞு த்தில் கூட்டுறவு சங்கங்கள் சட்டப்படி ரிஜிஸ்தர் செய்யப்பட்டது.)

தலைவர்: கனம் ஸ்ரீ வி, ராமதாஸ் பந்துலு, பி.ஏ., பி.எல்.,

இந்த வருஷத்தில் வந்த புரோபசல்கள் ... ரூ. 35,07,075

இந்த வருஷத்தில் அளிக்கப்பட்ட பாலிஸிகள் ... ரூ. 28,25,000

ஆரம்பமுதல் 8 வருஷ காலத்திற்குள்ளாக மொத்தம் செலுத்தப்பட்ட தொழில் தொகை ... ஒரு கோடிக்கு மேல்

மேற்சொன்ன புள்ளி விவரங்களானது கூட்டுறவு தொழில்களில் ஜனங்களுக்குள்ள நம்பிக்கையைச் சந்தேகமற நிரூபிக்கிறது.

பங்கு அல்லது டிபஞ்சர் மூலதனமின்றி தென்னிந்திய கூட்டுறவு இன்ஷியூரன்சு சொஸைட்டி முற்றிலும் பாலிஸிதாரர்களுடைய கம்பெனி. லாபம் முற்றிலும் பாலிஸிதாரர்களுக்குச் சொந்தமானது ஒரு விசேஷ அம்சம்,

| | |
|---|---|
| உறுதியான முதலீடு. | சர்க்கார் மேற்பார்வை. |
| சிக்கனமான நிர்வாகம். | குறைந்த பிரீமியம் கட்டணம். |
| உயர்ந்த லாபம். | தாராளமான பாலிஸி நிபந்தனைகள். |

வி. வெங்கடாசலம், எம்.ஏ., பி.எல்.,

காரியதரிசி.

The Village Panchayat Journal

VOL. IV] APRIL, 1941. [No. 1.

*The Editorial Committee do not hold themselves responsible for views expressed by contributors. Contributors are requested to write legibly and on one side of the paper. Manuscripts will not be returned unless stamps are sent to cover postage. Matter intended for the issue of any particular month should reach the Committee before the 15th of the previous month.*

## Sale, Collection, and adjustment of Fishery Rentals.

The Government in G. O. No. 251 L. A. dated February, 1st 1941 have, by an amendment of rule 159 for the conduct of business by Local Boards, ruled that only in the case of tanks (meaning other water sources also) which are provided by Local Boards and belong to them, the right of fishery shall be auctioned by the Local Boards concerned and the rentals shall be collected by them and credited to their funds. Even with regard to tanks (1) which vest in local boards as sources of drinking water and (2) which vest in local boards but which are neither sources of drinking water nor irrigation, the Government have ruled that the right of fishery shall be auctioned by the officers of the Revenue Department or by such other agency as may be determined by the Provincial Government from time to time and that the sale proceeds shall be credited to the Provincial Government. Amounts which are creditable to Local Boards shall be assigned to them in such manner as may be laid down by the Provincial Government from time to time.

Since Act XV of 1920 was passed, the Local Government, in order to help the panchayats to augment their sources of Revenue, permitted panchayats to auction fishery rights in all tanks vested in the panchayats or what are known as L. F. Tanks, as also in drains etc., which have no connection with P. W D. irrigation sources. After some time, obviously on receipt of complaints that some panchayats had been misbehaving in conducting auctions, the Government passed a G. O. directing the Revenue officials to conduct auction of all fisheries, in all tanks, channels and water-sources etc., and credit the sale proceeds to the panchayat. This system has been in vogue for the last 5 or 6 years.

Experience during these years has shown that the system of Revenue officials auctioning has not improved matters, but on the

other hand worsened the situation. This will be amply substantiated, if only Government call for statistics of the amounts realised by panchayats when they were conducting auctions and of the amounts realised by sales conducted by Revenue Officials etc. It can with confidence be stated that the realisations from sales conducted by Revenue Officers have been very very poor and panchayats suffered very much by a substantial fall in their income. The reasons for the fall are also patent. The fish in the pond or tank have to be carefully preserved and grown. This can only be done by the persons interested in realising good rentals. There were many panchayats who used to bring fish and grown them in tanks so that they could multiply. Panchayats used to keep watchmen to see that no one clandestinely stole fish. Will this be possible under Revenue control? The Revenue Department does not care for the realisations. The Government will not keep watch. The village officers not being interested, do not take any interest and no one even reports to them. The result is, by the time the Revenue Inspector gose to the village to auction, most of the fish disappear. There is a third factor that has an important bearing on the question. In many places fish have to be caught before rains set in and tanks get filled up or river water gets into the tank. Fish in tanks which are filled with canal water in many delta districts, escape into the canals. As such, the time for holding auction sales is very important. Usually the most opportune time to sell is June. But unfortunately, June is a very busy time for all Revenue Officers, with the result auctions invariably are held in July or August by which time fish in the tanks either disappear or it becomes difficult to catch. So it is the sad experience of many panchayats that at the sales held in July or August the proceeds have been much less than at sales held in proper season by the panchayats. All these factors have combined to materially affect the sale proceeds of auction of fisheries held by Revenue Officers.

There is one other important aspect to be considered. There has been great agitation for vesting panchayats with wider powers. In fact some very influential and responsible persons are for giving Revenue collections to panchayats. As such to take away the power to hold auctions from panchayats and vest them in Revenue officers is without justification. Even assuming there may be a few cases where panchayats have not taken sufficient care or allowed the auctions in favour of relatives for low prices, that is no ground for removing the power from panchayats as a whole. In the case of panchayats there is at least a check or safeguard. If some body sends even an anonymous petition to the Government against the panchayat alleging any fraud, the whole panchayat is liable to be sur-charged for the loss. There is at least this fear acting as sanction against fraud. Where is this sanction if, at a sale held by the

Government officers, some villagers combine and do not bid for the proper price. The Revenue Officer who has no interest knocks down the bid even if it be for a low price. The villagers re-auction and make large profits which invariably do not go to the panchayat. That this has been the state of affairs is a well known fact.

Thus, in every way, it is the panchayat that is suffering. There is no counter balancing advantage in the Revenue Officers conducting auctions. On the other hand, it is adding to the already heavy work of the Revenue Department. In that the receipts have to be credited to the Government Treasury and re-debited to the Panchayat, there is unnecessary duplication of accounts.

Therefore, it is necessary that the Government reconsider the whole question and revise the present system.

There is the further question as to the intention of the Government in deciding that the sale proceeds shall be credited to the Provincial Revenues in the case of tanks as per the classifications in G. O. No. 261-viz. a to *f*. It is only the "*g*" tanks that go to the panchayat. Till now the Government have been crediting panchayats the sale proceeds of all fisheries in all tanks (Local Board or Government). What is the purpose in classifying tanks into 8 categories. In the case of (*b*) tanks taken out by the fisheries Department it may well be that no sales are held. But in all the other classes of tanks (*a*) to (*g*) fish will be sold. And as per the liberal policy adopted by the Government till now, all sale proceeds of fisheries, grass, wind falls of withered trees etc., are being credited to Panchayats. We do hope that there is no change in the policy of the Government in this behalf, and that the Government will continue to give to the Panchayats the sale proceeds of fish in tanks etc.

---

## Panchayat Presidents and Permanent advance.

It is satisfactory to note that the Inspector of Local Boards has sanctioned that Presidents of Panchayat Boards may keep with them Rs. 10 as permanent advance. The previous resolution of the panchayat concerned is necessary to put this sanction into operation. Therefore such presidents as require this provision will note that they should get a resolution immediately passed in this behalf. If the daily needs of any panchayat should require a larger permanent advance the President of such Panchayat may apply, with reasons stated, to the Local Boards' Inspector for the same. We do believe this also presumes a resolution of the panchayat on the subject. Such Presidents as do want larger accomodation will please take the necessary steps. We are sure this present order will be very helpful to the Presidents and we hope that, in the future, Government

orders of removal of presidents for failure to invest funds in the Savings Bank will be much fewer.

---

## Circular No. 572—Roads.

Heretofore, Government grants were not available for spreading kankar or stone over inter-village roads. Now the Government have decided to give half grants for those purposes. But this provision will hold good only for the first time that such work is undertaken on such a road. It cannot be repeated for the same road. Therefore, panchayat Presidents will note that they have to plan in advance (1) for culverts and bridges on their own roads, (2) for inter-village roads and (3) for spreading kankar and stone on such roads for the first time and get the best for their Panchayats out of the new provision.

# கிராமப் பஞ்சாயத்து பத்திரிகை.

Vol. 4 | ஏப்ரல், 1941. | No. 1.

நிருபர்கள் எழுதும் அபிப்பிராயங்களுக்கு எடிட்டோரியல் கமிட்டியார் ஜவாப்தாரி ஆகிறதில்லை. இந்தப்பத்திரிகைக்கு எழுதுகிறவர்கள் புலப்படுகிற விதமாகக் காகிதத்தில் ஒரே பக்கம் எழுத வேண்டியது. தபாற்செலவுக்கு வேண்டிய ஸ்டாம்புகள் அனுப்பியிருந்தால் தவிரக் கையெழுத்துப் பிரதிகள் திருப்பியனுப்பமுடியாது. எந்த மாதத்தின் சஞ்சிகைக்காக வியாஸம் அனுப்பப்படுமோ அதற்கு முன்மாதத்திலே 15-ந் தேதிக்குள்ளாக அனுப்பவேண்டும்.

---

## தலையங்கம்.

### மீன்கள் குத்தகையின் விற்பனை, வசூல் சரிசெய்தல்.

ரூல் நம். 159-ன் பிரகாரம், 1941ஞ பிப்ரவரி 1௳, ஜீ. ஓ. நம். 261, எல். ஏ., ரூலில், லோகல் போர்ட்களின் சொந்தமானவையும், அவைகளால் மேற்பார்வை யிடப்பட்டும் இருக்கிற குளங்களும் மற்ற ஜல வசதிகளிலும் கிடைக்கும் மீன்களை குத்தகை, அவ்விற்பனை செய்து, அவர்களே வசூலித்து தங்களுடைய கஜானாவில் சேர்த்துக்கொள்ளலா மென்று சொல்விற்று. (1) குடிக்கும் நீர் வசதிக்காக லோகல் போர்டுகளால் ஏற்படுத்தப்பட்டதோ, (2) குடிக்கவும், விவசாயனத்திற்கும் வசதியில்லாமல் லோகல் போர்டுகளுக்கு ஏற்பட்டது, அப்படிப்பட்ட ஜலாதாரங்களிலிருந்து கிடைக்கும் மீன்களை ஏலமிடுவது ரிவின்யூ டிபார்ட்மெண்ட் அதிகாரிகளோ, அல்லது மாகாண கவர்ன்மெண்டுகளால் உத்தேசிக்கப்பட்ட மற்ற ஏஜென்ஸிகளோ அவ்வப்போது செய்யக்கூடு மென்றும், அப்பணத்தை மாகாண கவர்ன்மெண்டு கஜானாவில் சேர்க்கவேண்டும் என்று நிச்சயித்தார்கள்.

1920ஞ, ஆக்ட் நம். 15, முறைக்கு வந்ததிலிருந்து, லோகல் கவர்ன்மெண்டுகள், பஞ்சாயத்தின் ரிவின்யூ வளர்ச்சியை உதவிசெய்ய, எல். எப். என்று சொல்லப்படும் குளங்களிலிருந்தோ, அல்லது பஞ்சாயத்துகளுக்காக ஏற்படுத்தப்பட்ட குளங்களிலிருந்தோ, பி. டபில்யூ. விவசாயன வசதிகளில் சேராத நீர் வஸதிகளிலிருந்தோ, மீன்களை ஏலமிட உத்திரவிட்டார்கள். கொஞ்நாள் பிறகு, வெளியரங்கமாக பஞ்சாயத்து போர்டுகள் ஏல விவகாரங்களை, சரிவர நடத்துவதில்லை என்று தெரிந்தவுடன், ரிவின்யூ உத்தியோகஸ்தர்களுக்கு எல்லா ஜல வசதிகளிலிருந்து வரும் ஏல விவகா

ரங்களை நடத்தவும், அப்பணத்தை பஞ்சாயத்துகளுக் குத்வவும் அரசாங்கம் உத்தரவிட்டது. ஐந்து, ஆறு வருஷங்களாக இந்த உத்தரவு நடந்து வருகிறது.

ஷை வருஷங்களின் அனுபவத்திலிருந்து, ரிவின்யூ உத்யோகஸ்தர்கள் ஏல விவகாரங்களை நடத்தும்வழி சமாசாரங்களை முன்பெழுதவில்லை என்று காண்பித்தது. ஸ்திதியையும் கொடுத்தது. அரசாங்கம் பஞ்சாயத்துகள் வசூலித்தபொழுது கிடைத்த வரவு செலவு கணக்கையும், ரிவின்யூ உத்யோகஸ்தர்கள் வசூலித்த வரவு செலவு கணக்கையும் ஒத்திட்டுப் பார்த்தால், இவ்விஷயம் நன்ருக விளங்கும். ரிவின்யூ உத்யோகஸ்தர்கள் வசூலித்தது மிகவும் குறைவென்றும், இதனுல் பஞ்சாயத்து கவர்ன்மெண்டு மிகவும் நஷ்டப்பட்டது என்றும் நன்ருய் சொல்லக்கூடும். இதற்கு காரணங்கள் பகிரங்கமானது. முதலில், குளத்திலோ, அல்லது குட்டையிலோ இருக்கும் மீன்களை பத்திரப்படுத்தி வளர்க்கவேண்டும். குத்தகை விஷயத்தில் மும்முரம் உள்ளவனுல் இது செய்யக்கூடும். மீன்களை கொணர்ந்து, குளங்களில் வளர்த்து அபிவிருத்தி செய்யாத பஞ்சாயத்துகள் நிரம்ப இருந்தன. மற்றவர்கள் திருடாமலிருக்க பாராவும் வைத்தார்கள். ரிவின்யூ ஆதிக்கத்தில் இது முடியுமா? வருமானத்தைக் குறித்து ரிவின்யூ டிபார்ட்மென்டிற்கு ஒரு கவலையுமில்லை, அரசாங்கம் பாரா வைக்காது. கிரும உத்யோகஸ்தர்கள் அக்கரை செய்வதுமில்லை. ரிவின்யூ இன்ஸ்பெக்டர் ஏலமிட செல்லும்பொழுது குளத்தில் நிறைய மீன்களிருப்பதில்லை. சில இடங்களில், மழைக்கு முன்பு மீன்கள் பிடிக்கப்படவேண்டும், குளங்களில் ஆறுகளில் உள்ள ஜலம் வந்து விழும் இப்படி செய்யாவிடில், வாய்கால் ஜலத்தினுல் ரொப்பப்படவேண்டிய குளங்களிலுள்ள மீன்கள் தப்பி வாய்காலுக்கு சென்று விடுகின்றன. இப்படிப்பட்ட காலத்தில்தான் வியாபாரம் முக்கியம். விற்பனைக்கு நல்ல காலம் ஜூன் மாதம். துரதிர்ஷ்டவசமாக, இம்மாதத்தில் ரிவின்யூ உத்யோகஸ்தர்களுக்கும் நிறைய வேலைகளிருக்கின்றன. ஆகையினுல், ஜுலை அல்லது ஆகஸ்டு மாதத்தில் விற்பனை நடக்கிறது. ஆனுல் இதற்குள் மீன்கள் மறைந்து விடுகின்றன. ஜுலை, ஆகஸ்டு மாதங்களில் செய்யும் விற்பனையில் உண்டான லாபம், குறித்த காலத்தில் பஞ்சாயத்துகளால் செய்யப்பட்ட வியாபாரத்திலுண்டான லாபத்தை விட மிகவும் குறைவென்று நன்ருகத் தெரிகிறது. ஷை விஷயங்கள், ரிவின்யூ ஆபீஸர்கள் செய்யும் ஏல விஷயத்திற்கு தடை நிற்கின்றது.

முக்கிய விஷயம் ஒன்று இருக்கிறது. பஞ்சாயத்துகளுக்கு அதிக சக்தி கொடுப்பதற்கு நிரம்ப கலக்கங்களிருந்தன. இருந்தும், செல்வாக்கும், உத்தரவாதமும் உள்ளவர்கள், பண வசூலனையை பஞ்சாயத்தே செய்ய வேண்டுமென்று இருக்கிருர்கள். இப்படியிருந்தும், மீன் ஏல விற்பனையை பஞ்சாயத்துகளிடமிருந்து அபகரித்து, ரிவின்யூ உத்யோகஸ்தர்களுக்கு கொடுத்தது அநியாயம், ஏல விஷயமாக அதிக சிரத்தை எடுக்காததாகவும், ஊரவினர்களுக்கு குறைந்த விலைக்கு குத்தகை விட்டதாகவும் பஞ்சாயத்து

நினைத்துக்கொண்டாலும், இது பெரும் தவறன்று. பஞ்சாயத்து விஷயமாக ஒரு இடையூரு இருக்கிறது. அரசாங்கத்திற்கு பஞ்சாயத்தின் குற்றங்களைக் குறித்து அதற்கு விரோதமாக எதிர்க்கப்படாத பெட்டிஷன்களை அனுப்பித்தால், உண்டான நஷ்டத்திற்கு பஞ்சாயத்தை ஈடாக செய்யலாம். இது தப்பு செய்வதை தடுக்கக்கூடும். விற்பனை, கிராமவாசிகள் ஒன்று சேர்ந்து சரியான விலை கூறுவிட்டால் இத்தவறுகளுக்கு இடமேது. சிரத்தையில்லாத ரிவின்யூ ஆபீஸர், குறைந்த விலைக்குகூட குத்தகை விட்டுவிடுவார். கிராமவாசிகள், திரும்ப ஏலமிட்டு நிறைய லாபம் அடைகிறார்கள். ஆனால் பஞ்சாயத்துக்கு என்ன லாபம். இந்த நிலைமை நன்றாக தெரிந்ததே.

இதுபோலவே எல்லா விதத்திலும் பஞ்சாயத்து கஷ்டப்படுகிறது. ரிவின்யூ ஆபீஸர்கள் ஏலத்தை நடத்துவதால் ஒருவித லாபமும் இல்லை. மற்றொரு பக்கம் ரிவின்யூவிற்கு அதிக வேலை. ரசீதுகளை அரசாங்க கஜானாவிற்கு அனுப்பித்து, பிறகு பஞ்சாயத்திற்கு அனுப்பவேண்டும். இதிலிருந்து கணக்குகள் தவறிவிடும்.

ஆகையினால், இவ்விஷயத்தை அரசாங்கம் திரும்பவும் யோசித்து, இவ்வித ஸிஸ்டத்தை மாற்றுதல் மிகவும் அவசியம்.

ஜி. ஓ. நம். 261-ல் ஸப் டிவிஷன் ஏ. to எப். களைச் சார்ந்த குளங்களிலிருந்து கிடைக்கும் பணம் மாகாண கஜானாவில் சேரவேண்டுமென்று அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது. 'ஸி' கிளாசில் சேர்ந்த குளங்கள்தான் பஞ்சாயத்தை சார்ந்தது. இதுவரையிலும் எல்லா (லோகல் போர்ட், அரசாங்கம் இவைகளைச் சார்ந்த) குளங்களிலிருந்து கிடைக்கும் பணம் பஞ்சாயத்திற்கே சென்றது. இப்படியிருக்க, குளங்களை 8 பிரிவுகளாக பிரிப்பதேன்? மீன் பிடிக்கும் டிபார்ட்மெண்டை சார்ந்த (பி) டிவிஷன் குளங்களில் ஏலம் நடப்பதில்லை என்பது நிச்சயம். ஆனால் மற்ற கிளாஸ் குளங்களில் மீன்கள் விற்கப்படுகின்றன. மீன்களினால் கிடைக்கும், புல்லினால் கிடைக்கும், இலையுதிர் காலத்தில் மரத்தினால் கிடைக்கும் பணம் யாவையும் பஞ்சாயத்துக்கே இதுவரையிலும் அரசாங்கம் கொடுத்துவந்தது. இவ்விஷயமாக அரசாங்கம் தலையிடாதென்றும், இப்பணங்கள் யாவும் பஞ்சாயத்திற்கே கொடுக்குமென்று அரசாங்கத்தை நம்புகிறோம்.

---

## பஞ்சாயத்து காரியதரிசிகளும் ஸ்திர முன்பணமும்.

பஞ்சாயத்தின் கஷ்டங்களை அறிந்து, ஸ்திர முன்பணம் கொடுத்து, அதை பஞ்சாயத்து காரியதரிசிகளே முன்னிருக்கும் பணத்துடன் வைத்துக்கொள்ளும்படி செய்ததற்கு மிகவும் சந்தோஷம். சொல்லப்பட்ட பணம் ரூ. 10. ஆனால் அதிகம் வேண்டுமென்கிற பஞ்சாயத்து காரியதரிசிகள் லோகல் போர்ட் இன்ஸ்பெக்டருக்கு எழுதி வாங்கிக்கொள்ளலாம் ஸர்குலர் நம். 571 பிரகாரம் மேல்கூறிய விஷயத்திற்கு வேண்டிய பண

உதவியை பெற்று காரியத்தை, காரியதரிசிகள் நடத்தவேண்டும். காரிய தரிசியிடம் ஸ்திர முன்பணம் இருக்கவேண்டுமென்று பஞ்சாயத் போர்டின் தீர்மானமென்பதை அவர்கள் அறியவேண்டும். ஸ்திர பணம் வேண்டிய காரியதரிசிகள் அநுமதிபெற தங்கள் வேலையை சரிவர செய்யவேண்டும். பாங்கிகளில் பணம் வைக்கத் தவரினதால் காரியதரிசிகளை எடுத்துவிடுவதும், இதனாலுண்டான கஷ்டங்கள் யாவையும் சரிசெய்யப்படுமென்று நம்புகிறோம்.

---

## ஸர்குலர் நம். 572.—ரஸ்தாக்கள்.

இதுவரையிலும் அரசாங்கம் ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊருக்கு செல்லும் ரஸ்தாக்களை சரிசெய்யவோ, கல்கள் போடவோ, பணம் கொடுக்கவில்லை. இப்பொழுது அப்படிப்பட்ட சிலவுக்கு அரசாங்கம் பாதி கிராண்டு கொடுக்க நிச்சயித்திருக்கிறது. ஆனால் இது புதிதாக போடும் ரோடுகளுக்குதான் குறித்தது. மறுபடியும் அந்த ரோடுகளை சரிசெய்ய அரசாங்கம் கிராண்டு கொடுக்காது. ஆகையினால் பஞ்சாயத்து காரியதரிசிகள் (1) பஞ்சாயத்து போர்டு இலாகா ரோடுகளின்மீது, பாலங்கள் வாய்கால்கள் கட்டுவதற்கும், (2) ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊருக்கு செல்லும் ரோடு போடுவதற்கு (3) அப்படிப்பட்ட ரோடுகளுக்கு முதல்தரம் போடுவதற்கும், கல்கள் போடுவதற்கும், ஆகிய இவைகளுக்கு தனக்கு கிராண்டுகள் கிடைக்குமென்று நினைத்து பஞ்சாயத்துகள் இந்த பணத்தை கைகொண்டு அனுபவிக்கவேண்டும்.

---

# அரிசி உண்போரின் சாப்பாட்டை எப்படிச் சீர்திருத்தலாம்?

---

**மில் குத்திய அரிசியின் பேரில்மோகம்:**—தென்னிந்தியாவில் தனவந்தர்கள் நன்றாக குத்தி தீட்டிய மில் அரிசியைத்தான் சாப்பிடுகிறார்கள். இந்த அரிசி மற்றைய தடிப்பான அரிசியை விட ருசியாகவும் பார்ப்பதற்கு வெள்ளையாவும் இருப்பதேதான் அதற்குக் காரணம். ஏழைகளும் இப்போது அதிகமாக மில் அரிசியை உபயோகிப்பதற்குக் காரணம் பணக்காரர்கள். மில்லில் குத்திய வெண்மையான பச்சரிசியைச் சாப்பிடுவதுதான். அது இப்போது நாகரீகமென்று கருதப் படுகிறது. ஏழைகளின் பழக்கத்தை மாற்ற வேண்டுமானால் பணக்காரர்கள் அதிகம் தீட்டாத கைக்குத்தரிசியை உபயோகித்தால், ஏழைகளும் கைக்குத்தரிசியைச் சாப்பிடுவார்கள்.

இது விஷயமாக, தென்னிந்தியாவில் ராகியைப்பற்றியும் மற்றும் சோளம், கம்பு, இவற்றினிடத்து ஜனங்களுக்குள் ஒரு வெறுப்பைப் பற்றி நாம் கவனிக்க வேண்டும். மேற் கூறிய தானியங்கள் அரிசியைக்காட்டிலும் அதிக உணவுச் சத்துக்கள் நிறைந்தவை. ஆகவே அரிசி சாப்பிடுவோர் தினந்தோறும் இவற்றில் ஏதேனும் ஒரு தானியத்தைச் சாப்பிடுவது நல்லது. பள்ளியில் படிக்கும் பெண்களின் விடுதியில் அரிசியைச் சிறிது குறைத்து, அந்த அளவுக்கு ராகியைச் சேர்த்து உணவளித்தால் அவ்வுணவைச் சாப்பிடப் பெண்கள் மறுக்கின்றனர். அதை வெறுக்கின்றனர். அவர்கள் சொந்த ஊரிலும் ஜில்லாவிலும் எல்லாரும் வழக்கமாக ராகியையே சாப்பிடுகிறார்கள். ஆனால் ராகியைச் சாப்பிடும்படி இப்பெண்களைக் கெஞ்ச வேண்டியிருக்கிறது. ராகியை எல்லாரும் தாழ்மையாக மதிக்கிறார்கள். கிராமங்களிலுள்ள ஏழை எளியவர்களுக்கேற்ற உணவென்றும் சிறைச்சாலையில் குற்றவாளிகளுக்கேற்ற உணவென்றும் எண்ணுகிறார்கள். பட்டணவாசங்களில் மாணவர் விடுதிகளில் வசிக்கும் பெண்களும் பையன்களும் உண்பதை விட்டு, பட்டணத்தாரைப்போல அரிசி உணவை யுண்டு, தங்கள் பெற்றோர்களைக் காட்டிலும் மேலான அந்தஸ்தை அடையலாம் என்று எண்ணுகின்றனர். இந்த மனோபாவம் நமது சென்னை ராஜதானி முழுதுமே எல்லா ஜனங்களிடையும் இருப்பதை நாம் பார்க்கலாம்.

**நெல்லைச் சேர் கட்டி வைத்தல்:**—நல்ல குதிர் கட்டி, அதில் நெல்லை ஒரு வருஷம் வரை கெடாமல் வைக்கலாம். மில்லில் குத்தித் தீட்டிய அரிசியையும் அம்மாதிரியே பத்திரப்படுத்தி ஒரு வருஷம் வைக்கலாம், ஆனால் தீட்டாத ஒரு குத்து அரிசி இரண்டு மூன்று மாதங்களில் கெட்டுப்போகிறது. அதற்குக் காரணம், அதனுடைய முளையும் மட்டையும் அதிக சத்துள்ளதாலும் கொழுப்பு நிறைந்திருப்பதாலும் இவ்விதம் சீக்கிரம் கெட்டுப்போகிறது. ஆனால் இவ்விதமான அரிசியைக் கடையில் விற்பதில்லை.

வீட்டில் குத்தும் அரிசியில் மூளையும், மட்டையில் பாதியும் நஷ்டமாய்ப் போகிறது. வீட்டில் கையினால் குத்தப்பட்ட அரிசியைப் பல மாதங்கள் நாம் வைத்திருக்கலாம். ஆனால் பச்சரிசியைப்போல் அதை நீடித்து வைக்க முடியாது. அம்மாதிரியே, அரைக்குத்து மில் அரிசியையும் நன்றாக குத்திய மில் அரிசியைப்போல அதிக நாள் வைத்திருக்க முடியாது. அரை குத்துப் புழுங்களரிசி, அரைக்குத்துப் போட்ட பச்சரிசியைவிட அதிக நாள் தாங்கலாம்.

ஆனால் தென்னிந்தியாவில், நெல்லைச் சேர்கட்டி பத்திரப்படுத்தும் விஷயம் அவ்வளவு முக்யமல்ல. சாதாரணமாக, அரிசியையோ, நெல்லையோ ஜனங்கள் அதிகநாள் சேர்கட்டி வைப்பதில்லை. விளைந்த நெல் செலவானதும், வேறு இடங்களிலிருந்து நெல் விலைக்கு வருகிறது. அது செலவானதும் புது நெல் வருகிறது. ஆகையால் இந்த விஷயம் அவ்வளவு முக்யமானதல்ல.

இந்தியாவில் மற்றவிடங்களில் இருக்கும் நிலை.

இந்தியாவில் மற்றைய இடங்களைவிட சென்னை மாகாணத்தில்தான் மில்லில் குத்தின அரிசியை அதிகமாக ஜனங்கள் சாப்பிடுகின்றனர். அது கீழ்க்கண்ட புள்ளிகளிலிருந்து விளங்கும்

ஜனத்தொகையில் நூற்றுக்கு மாகாணம். கைக்குத்து அரிசிசாப்பிடுவோர் அஸாம், வங்காளம், பீஹார், ஹைதராபாத் 85759070

| | |
|---|---|
| ஒரிஸ்ஸா | 80 |
| திருவாங்கூர் | 45 |
| ஐக்கிய மாகாணம் | 85 |
| மதராஸ் | 30 |

இன்னும் இருபது வருஷங்களுக்குள் மற்றைய மாகாணங்களிலும் இம்மாதிரி கைக்குத்து அரிசியை சாப்பிடுவர்களின் எண்ணிக்கை, அரிசி குத்தும்மில்கள் அதிகரிக்க அதிகரிக்க. குறையும் ஆகவே, வீட்டிலேயே நெல்லைக்குத்திச் சாப்பிடும் வழக்கமுள்ள மாகாணங்களிலே, அரிசி மில்கள் பரவாமலிருக்க வேண்டிய முற்காப்பான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியம்.

நூற்றுக்கு 70 வீதம் மில்லில் குத்திய அரிசியைச் சாப்பிடும் ஒரு மாகாணத்தில் கைக்குத்தரிசியையே எல்லாரும் சாப்பிடும்படி செய்வதென்பது கஷ்டமான காரியம். ஆனால், இது வரை மில்கள் பரவாத பிராந்தியங்களில் இனி மில்கள் வைக்கக் கூடாதென்ற ஒரு சட்டத்தை அரசாங்கத்தார் கொண்டுவந்தால் இந்த குறையை நாம் சிறிது தடுக்கலாம்.

ஆனால் இதைவிட ஜனங்களிடை, அரிசியின் உணவுச் சத்தைப்பற்றிப் பிரசாரம் செய்தால், அது அதிக பலனைக்கொடுக்கும். இதனால் ஜனங்கள் மட்டை கக்காத அரிசியைச் சாப்பிட ஆவலுள்ளவர்களாகலாம். அப்போது கைக்குத்து அரிசிக்கு தேவை அதிகரிக்கும். கைக்குத்து அரிசிக்கு தேவை அதிகரித்தால், கிராமங்களில் அரிசி குத்தும் தொழில் புத்துயிர்பெறும்.

இதற்கனுகூலமாக தற்காலத்தில் சில திருகைகளும் ஏற்பட்டிருக்கின்றன. உதாரணமாக மரத்தினால் செய்தகை திருகை ஒன்று இருக்கிறது. இதில் இரண்டு பாகங்கள் ஒன்றின் மீது ஒன்றாக இருக்கும். மேலே இருக்கும் பாகத்தைக் கையினால் வீசவேண்டும். இவ்விரண்டு மூடிகளுக்கும் நடுவில் வாய்க்கால் போன்ற

பள்ளத்தில் நெல் நசுக்கப்பட்டு உமியும் அரிசியுமாக வெளிவருகிறது. ஆனால் அரிசியின் மட்டை வெளியே வருவதில்லை. மட்டையுள்ள இந்த அரிசியில் அதிகமான உணவுச் சத்து இருக்கிறது. இந்தக்கை திருகையின் விலை 4, அல்லது 5 ரூபாய்தான். ஆகையால் இதை ஒவ்வொரு வீட்டில் வாங்கி வைததுக் கொண்டு தங்களுக்கு அன்றாடம் வேண்டிய அரிசியைக்குத்திக் கொள்ளலாம். கஷ்டமேயில்லை.

**ஸ்தாபனங்கள்:**—சர்க்கார் ஸ்தாபனங்களில் கைக்குத்தரிசியையும் அரைக் குத்தமில் அரிசியையும் உபயோகிக்க வேண்டும். வேறுதனிப்பட்ட மாணவர்கள் விடுதியிலும் இம்மாதிரி கைக் குத்தரிசியை உபயோகிக்கலாம். சென்னை அரசாங்கத்தார் சிறைச்சாலைகளிலும் ஆஸ்பத்திரிகளிலும் கட்டாயமாகக் கைக்குத்தரிசியை உபயோகித்து வருகிறார்கள். இதனால் உணவின் சத்து அதிகரிப்பது மல்லாமல் நாட்டில் பலபேருக்கு வேலையும் கிடைகிறது.

**அரிசியைக் கழுவுதலும் சமைத்தலும்:**—அரிசியைத் தண்ணீர் விட்டுக் களைந்து அலம்புவதில் முதல் தடவையிலேயே அதிலுள்ள முக்கால்வாசி உணவுச் சத்துக்கள் வீணாகின்றன. முதலில் கழுவுவதில் சத்துப் போகாமலிருக்க என்ன செய்யவேண்டு மென்பதைத்தான் கவனிக்கவேண்டும். அரிசி சுத்தமாகவிருந்தால் அலம்பவேண்டிய அவசியமேயில்லை. நீங்கள் சுத்தமாகவிருந்து, கடைகளும் விற்கும் இடங்களும் சுத்தமாயிருந்தால், நாம் அரிசியைக் கழுவவேண்டிய அவசியம் அதிகமாயிராது. அம்மாதிரியே சமைக்கும்போதும் எவ்வளவு தண்ணீர் வேண்டுமோ அவ்வளவு விட்டுத்தான் சமைக்கவேண்டும். கஞ்சியை வடிக்கக்கூடாது. இதைப் பற்றி ஜனங்களிடை அறிவு பரவவேண்டும். மில்லில் குத்தும்போது என்ன வாகிறது, அலம்புவதாலும் கஞ்சியை வடிப்பதாலும் அரிசியில் என்ன மாறுதல்கள் நஷ்டங்களேற்படுகின்றன வென்பதை ஜனங்கள் நன்குணரவேண்டும்.

அரிசி உணவை எப்படி நாம் உணவுச் சத்துக்கள் நிறைந்ததாகச் செய்யலாம் என்பதைக் கவனிப்போம். கீழே காட்டியுள்ள இரண்டாவது தலையின்கீழ் தற்போது ஜனங்கள் சாப்பிடும் ஆகாரத்தின் அளவும், மூன்றாவது தலையின்கீழ் நிறைந்த ஆகாரத்தின் அளவும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

| ஆகாரம். | | ஜனங்கள் வழக்கமாய்சாப்பிடும் உணவின் அளவு. | | | | நிறைந்த உணவின் அளவு. | |
|---|---|---|---|---|---|---|---|
| | | (அவுன்சில்) | | பலம். | | (அவுன்சில்) | பலம். |
| அரிசி (தானியங்கள்) ராகி, சோளம், கம்பு வகையறா | ... | 0 15 | 25 | 37½ | 65½ | 15 | 37½ |
| பருப்பு வகைகள் | ... | 0 5 | 1.5 | 1¼ | 3¾ | 3 | 7½ |
| பால் | ... | மிகவும் சொல்பம் அல்லது பூஜ்யம். | | | | 8 | 20 |
| கீரை | ... | 0 5 | 1.0 | 1¼ | 2½ | 4 | 10 |
| காய்கறிகள் | ... | 2 0 | 3.0 | 5 | 7½ | 6 | 15 |
| பழங்கள் | ... | கிடைப்பது மிக சொல்பம் | | | | 2 | 5 |
| நெய் எண்ணெய் | ... | | 1.0 | 2 | 2½ | 2 | 5 |
| மீன், மாமிசம், முட்டை | ... | 0 5 | 1·5 | 1¼ | 3¾ | 3 | 7½ |

இத்துடன் ஊருகாய்களும், மசால் சாமான்களும் சாப்பிடலாம்.—சாப்பாட்டுடன் பால் சாப்பிடாமல் இருந்தாலும் அல்லது கொஞ்சமாக சாப்பிட்டாலும் சரி அவர்கள் மீன் மாமிசம் முட்டைகளைச் சாப்பிடவேண்டியது அவசியம்.

இனி, நம்முடைய உணவில் சேர்ந்துள்ள ஆகாரங்களின் தன்மை ஒவ்வொன்றையும் பற்றி நாம் சிறிது விவரமாகக் கவனிப்போம்.

(1) கேழ்வரகு, சோளம், கம்பு, உடைக்காத கோதுமை அரிசி, இவையெல்லாம் மில் குத்து அரிசியைவிட அதிக உணவுச் சத்துக்கள் உள்ளவை. ஆகவே அரிசியைச் சாப்பிடுவார்கள், மேற் கூரியவற்றில் தினமும் 4 முதல் 6 அவுன்ஸ் வரை சேர்த்துச் சாப்பிடுதல் நல்லது. கோதுமை குளிர் தேசத்தில் விளைகிறது ஆகையால் அது எல்லாருக்கும் கிடைப்பது கஷ்டமாயிருக்கலாம். அதற்கு பதிலாக ராகி, சோளம், கம்பு இவற்றை நாம் உட்கொள்ளலாம். அவை நமது மாகாணம் முழுதும் பயிராகின்றன. ஆனுல் ஜனங்கள் ராகி சோளம், கம்பு இவற்றை உண்பது இழிவு என்றும் ஆரோக்யமல்ல என்றெண்ணுகிருர்கள். உணவுச் சத்துப் பரிசோதிகர்கள் இவற்றை ஆராய்ந்து பார்த்து, இந்த அபிப்பிராயம் தப்பானது என்றும் அவை புஷ்டி உணவுச்சத்துக்கள் நிறைந்த ஆகாரங்கள் என்று கண்டு பிடித்திருக்கிருர்கள்.

(2) பருப்புகள்.—அரிசி சாப்பிடுபவர்கள் அநேகமாய் பருப்பு சேர்ப்பதேயில்லை. அரிசியிலில்லாத மிக அவசியமான சில உணவுச்சத்துக்களையும் வைடமின்களையும் நாம் பருப்பிலிருந்து அடையலாம். மில்லில் குத்திய பச்சரிசியை சாப்பிடுவோர்கள் பெரி பெரியைத் தடுக்கக்கூடிய உணவுச்சத்து உள்ள பருப்பையும் சேர்த்துச்சாப்பிட்டால் பெரி பெரி வராமல் தடுக்கலாம். விவசாயிகள் பருப்பு வகைகளை இன்னும் அதிகமாகப்பயிர் செய்ய முன் வரவேண்டும். விவசாய இலாக்காதார் நல்ல பருப்புவகைகளைப் பயிர செய்ய விவசாயிகளுக்கு உதவி செய்யவேண்டும்.

(3) பால்.—நமது மாகாணத்தின் பல பாகங்களில் அநேகம் ஜனங்கள் பால் குடிப்பதே கிடையாது. அரிசிவுணவிலுள்ள குறைகளை நீக்குவதற்கு பால் மிகவும் ஏற்றது என்று முன்னமேயே சொல்லி யிருக்கிருேம். ஆகவே, கறவை மாடுகளை அதிகமாக வளர்த்து அதிகமாகப் பாலை அபிவிருத்தி செய்யவேண்டும். நாட்டில் அதிகமான மேய்ச்சுத் தரைகள் தேவை.

கறந்தபால் விலை அதிகமாயிருந்தால் சிலர் வாங்கமுடியாது சில இடங்களில் பால் வேண்டுமென்ருலும் கிடையாது. அச்சமயத்தில் பொடிப்பாலை உபயோகிக்கலாம் (Skimmed Milk) இம்மாதிரிப்பாலை முக்யமாக குழந்தைகளின் விடுதிகளில் உபயோகிக்கலாம். மோரும் அதிக நன்மையை யுண்டாகும். ஆனுல் அதில் அதிக நீரை விட்டு நீர் மோராகச் செய்யக் கூடாது.

சாதாரண அரிசிச்சாப்பிட்டால், சுண்ணும்பு (calcium) குறைவு. இக்குறை பால் சேருவதால் நீங்கும். ராகி, கீரையிலும் (calcium) சுண்ணும்பு அதிகம். சுண்ணும்பு வேண்டுமானுல் சுண்ணும்பு உப்பிலிருந்தும் பெறலாம் (calcium lactate) இந்தச்சுண்ணும்பு உப்புக்கு ஒர் ஆளுக்கு மாதம் சுமார் 2 அணு செலவாகும். பள்ளிக்கூடக் குழந்தைகளுக்கு சுண்ணும்பு உப்பைப் பாலுக்கு பதிலாகக் கொடுக்கலாம். கர்ப்ப ஸ்திரீகளும் பால் கொடுக்கும் தாய் மார்களும் இந்த உப்பைச் சாப்பிடலாம்.

4. காய் கரிகள்.—வைடமின் ஏவும் சுண்ணாம்பும் நிறைந்துள்ள கீரை வகைகளெல்லாம் அரிசி சாப்பிடுவோர் எல்லாரும் சாப்பிடலாம். அது மிகவும் சிலாக்யம். மாகாணம் முழுதும் கணக்கு எடுத்துப் பார்த்ததில் அரிசி சாப்பிடுவோர் கீரையை வேண்டியளவு சாப்பிடுவதில்லையென்று தெரிகிறது. ஆனால் காய்கரிகளை அதிகமாக சாப்பிடுகிறார்களென்றும் ஒரு நிறைந்த உணவில் இருக்க வேண்டிய 6 அவுன்ஸ் காய் கரிகளைத் தின்பது கிடையாது. காய் கரி வகைகளையும் கீரை வகைகளையும், அதிகமாக உண்பதனால் நன்மை ஏற்படுமென்பதில் சிறிதும் சந்தேகமில்லை. இது விஷயமாய் ரஸ்ஸலின் யதாஸது கூறும் யோசனையை கவனிப்போம்.

“கீரையை நாடெங்கும் ஜனங்கள் இன்னும் அதிகமாகப் பயிர் செய்ய வேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும், எரு வசதியும் நீர் வசதியும் இருக்குமிடத்திற்கருகாமையிலே காய் கரிகளைப் பயிரிடவும் பழங்களை வளர்க்கவும் ஒரு பண்ணை வைத்து ஜனங்களுக்கு இது விஷயத்தில் உத்ஸாகத்தை ஏற்படுத்த வேண்டும். இப்போது விளையும் காய் கரிகளை விட இன்னும் அதிகமாக காய் கரிகளையும் பயிர் செய்வது நல்லது.”

கிராமங்களிலும் பட்டிணங்களிலும் வீட்டின் பின் புறத்தில் காய்கரிச் செடிகளைப் போட்டு வளர்க்கும்படி ஜனங்களுக்கு உத்ஸாகத்தை உண்டாக்க வேண்டும். இதை உணவுச் சத்து பரிசோதனைக் கூட்டத்தார் ஆதரித்து கிராம ஜனகங்ளுக்கு வற்புறுத்துகின்றனர். சில இடங்களில் இம்மாதிரி தோட்டங்களை பின்புறத்தில் வைத்து அநேகம்பேர் காய்கரிகளையும் கீரைகளையும் பயிர் செய்கிறார்கள். சாதாரணமாகவே இந்தியாவில் எல்லா வசதி யிருந்தாலும் கிராம ஜனங்கள் காய்கரிகளை பயிர் செய்வதில்லை. காய்கரிகளின் உணவு விசேஷத்தைப் பற்றி அவர்களுக்குப் பிரசாரம் செய்யவேண்டுவது மிகவும் அவசியம். அவற்றைப் பயிர் செய்யவும் அவர்களைத் தூண்ட வேண்டுவது அவசியம். விவசாய பரிசோதர்களும் காய்கரிகளைப் பயிர் செய்யும் விஷயமாய் இன்னும் தக்க ஆராய்ச்சிகளைச் செய்து கிராம ஜனங்களுக்கு உதவி செய்ய வேண்டும்.

(5) பழங்கள்.—இந்தியாவில் போதுமான அளவு பழங்களை விவசாயிகள் செய்வதில்லை. ஜனங்களும் போதுமான அளவு பழங்களைச் சாப்பிடுவதில்லை. பழங்களில் அபரிமிதமான வைடமின்கள் இருக்கின்றன, முக்கியமாக வைடமின் ஸி, அவற்றில் அதிகம். பழங்கள் எலும்பு வியாதிகளைத் தடுக்கின்றன. மற்றும் சில பழங்களில் வைடமின் ஏ அதிகமாயிருக்கின்றன. மாம்பழம், பப்பாளி, சீமை தக்காளிப்பழம் (டொமாடோ) ஆரன்சுபோன்ற பழங்களில் மற்ற பழங்களில் இருப்பதைவிட உணவுச் சத்துக்களும் வைடமின்களும் அதிகம். எல்லாப் பழங்களைக் காட்டிலும் (டொமாடோ) சீமைத்தக்காளி விலை சரசமானது. இப்போது எங்கும் பயிராகிறது. ஆகையால் ஜனங்கள் அதை அதிகமாய் சாப்பிடவேண்டுமென்று வற்புறுத்தலாம்.

(6) எண்ணெய்களும் கொழுப்பும் :—அரிசி சாப்பிடுவோர் வேண்டியளவு எண்ணெயையும் கொழுப்பையும் சாப்பிடுவது கிடையாது. அவர்கள் இப்போது சாப்பிடும் எண்ணெய் கொழுப்பு இவற்றை இன்னும் ஒரு மடங்கு அதிகரித்துக் கொண்டால் நன்மையே ஏற்படும். இதற்காக வேண்டிய, எள், நிலக்கடலை, கடுகு போன்ற தானியங்களை இன்னும் அதிகமாகப் பயிர் செய்யவேண்டும். சுத்தமான நெய்யும் கிடைப்பதற்கு வேண்டிய சௌகரியங்களும் தேவை.

(7) முட்டை, மீன், மாமிசம்:—முட்டைகள் அதிக உணவுச சத்துள்ளவை. அவற்றை அதிகமாக உற்பத்தி செய்யவேண்டும்.

மாமிசம் அரிசியிலுள்ள குறைகளை ஒருவாறு நீக்குகிறது என்றாலும் மாமிசம் சாப்பிடுவோர், அதை வேண்டிய அளவு சாப்பிடுவதில்லை. இந்தியாவில் அநேகர் மாமிசத்தை கண்ணால்கூடப் பார்க்கமாட்டார்கள்.


மீன் அதிக சத்துள்ள ஒரு உணவுப் பதார்த்தம். மீனின் தசைகள் வேண்டிய உணவுச் சத்துக்களையளிக்கும். சிறு மீன்களை முழுதாகச் சாப்பிட்டால் அதி னின்றும் அதிக நன்மை ஏற்படுகிறது. அவற்றில் சுண்ணாம்பு அதிகம் (calcium) ஆனால் நமது நாட்டில் மீன் பிடிக்கும் தொழில் மற்றைய நாடுகளில் இருப்பதைப் போல, அபிவிருத்தி யடையவில்லை. இதை விருத்தி செய்வது மிகவும் அவசியம்.

நார்வேயிலிருந்து வரும் (காட்லீவர் ஆயிலை) மீன் எண்ணெயை நமது நாட்டில் ஏராளமாக ஜனங்கள் உபயோகிக்கின்றனர். இதில் வைடமின் ஏ அதிகம். புஷ்டி யற்று மெலிந்திருக்கும் குழந்தைகளுக்கு இது மிகவும் நல்லது. ஆனால் இந்தியாவி லுள்ள எல்லா குழந்தைகளுக்குமே காட்லீவர் ஆயில் கொடுத்தால் நன்மை உண் டாகும். ஆனால் இந்த மீன் எண்ணெயை நாம் இந்தியாவில் கிடைக்கும் மீன் களைக் கொண்டும் செய்யலாம். அவற்றிலும் வைடமின் ஏ அதிகமாயிருக்கின்றன. இந்தியாவில் உள்ள சில மீன்களின் உணவுச் சத்தும் வைடமினும் காட்மீனிலுள் ளதைவிட அதிகமாகவே யிருக்கிறது. ஆகவே, இந்தியாவில் மீன் எண்ணெய்த் தொழிலுக்கு வேண்டிய சௌகரியங்க ளிருக்கின்றன. அதை அபிவிருத்தி செய் தால் ஜனங்களுக்கு ஆரோக்யம் ஏற்படும். நாட்டின் செல்வமும் அதிகரிக்கும்.

காட்லீவர் எண்ணெயை விலை அதிகமென்று சிலர் சாப்பிடுவதில்லை. மற்றும் அநேகம்பேர் அது ஒரு ஜீவஜந்துவென்றும் அதினின்றும் எடுக்கும் எண்ணெய் மாமிசத்திற்குச் சமானம் என்றும் கருதி அதைச் சாப்பிடாமல் இருக்கின்றனர். இந்த மீன் எண்ணெயைவிட அதே சத்துக்கள் வைடமின்கள் நிறைந்த வேறு ஒரு சத்துள்ள உணவுப்பொருள் ஒன்றுமில்லையாவென்று கேட்கலாம். அவ்விதமான ஒரு பொருள் இருக்கிறது. அதற்கு சிவப்புப் பனை எண்ணெய் என்று பெயர் (Red Palm oil) அதில் (Pro. Vitamin A.) வைடமின் ஏ. இருக்கிறது. இந்தப் பனை மரம் மேற்காப்பிராக்காவிலும் மலேயாவிலும் பயிராகிறது. அதன் பழத்திலிருந்து எடுக்கப்படும் நெய்போன்ற ஒரு கொழுப்பு காட்லீவர் ஆயிலுக்குச் சமானம் என்று சொல்லப்படுகிறது. அந்தப் பனையை வைத்து வளர்த்தால் நன்றாக வருமா வென்று சில பனைகளை நமது நாட்டிலும் வைத்து வளர்க்கிறார்கள். ஆஸ்பத்திரி களிலும் வைத்யசாலைகளிலும் சிவப்புப்பனை எண்ணெயை காட்லீவர் ஆயிலுக்குப் பதிலாக உபயோகிக்கிறார்கள். காட்லீவர் ஆயில் சாப்பிடுவதால் என்ன நன்மைகள் ஏற்படுமோ அவ்வளவு நன்மைகளும் அதனால் ஏற்பட்டிருக்கின்றனவாம்.


(8) சர்க்கரை:—பல நூற்றாண்டுகளாக இந்தியாவில் கரும்பிலிருந்தே சர்க் கரை செய்து வருகிறார்கள். ஆனால் நமது நாட்டில் நமக்கு வேண்டியளவு சர்க் கரையை உற்பத்தி செய்யும் தொழில் எவ்வளவுக் கெவ்வளவு விருத்தியடைகிறதோ அவ்வளவுக்கவ்வளவு நல்லது. அதில் நமக்கு வேண்டிய சக்தி (Energy) கிடைக் கிறது. ஆனால் அதில் வைடமினாவது, உணவுச் சத்தாவது கிடையாது. சர்க் கரையை உபயோகிப்பதில் வெள்ளைச் சர்க்கரையைவிட பழுப்புச் சர்க்கரையும், வெல்லமும் பனவெல்லமும் சிலாக்யமானவை.

இந்தியாவில் கோடிக்கணக்கான மக்கள் புசிக்கும் புஷ்டியற்ற வாழ்க்கைக்குப் போதாத ஆகார விவரங்களைக்கீழே படத்தில் குறிக்கப்பட்டிருக்கிறது. சாப்பிடும் ஆகாரங்கள், அவற்றின் எடையை தோலாவிலும், அவுன்சிலும் காட்டப்பட்டிருக்கிறது.





இதிலிருந்து 1,750 காலரிகள்தான் கிடைக்கின்றன. ஒரு சாதாரண மனிதனுக்குத் தினகரி வேண்டிய காலரிகள் இவ்வுணவில் அதிகக்குறைவு. இது புரதம், வபை, வைடமின், மிகவும் குறைந்த உணவு.

அரிசியும் கம்புவகைகளும் சலந்த சீராயமைந்த புஷ்டியுள்ள போதுமான ஆகாரம் எப்படி யமையவேண்டுமென்பதைக் கீழே காட்டப்பட்டிருக்கிறது. இந்த ஆகாரத்திற்கு ஒரு நபருக்கு 1 மாதத்திற்கு 5 ரூபாய்தான் பிடிக்கும்.




முதியோர்களுக்கு ஒரு நாளைக்கு வேண்டிய 2,600 காலரிகளை மேற்கூறிய உணவிலிருந்தும் பெறலாம். இதில் உடல் வளர்ச்சி, சக்தி, பலம், இவற்றிற்கு வேண்டிய புரதம், வபை, வைடமின்கள், உப்புவகைகள் போதுமான அளவு நிறைந்திருக்கின்றன.




உயரமும் பலமும் நிறைந்த ஜாதியார்கள் மிகவும் சத்து நிறைந்த ஆகாரத்தைச் சாப்பிடுகின்றனர். இந்தியாவில் பற்பலஜாதியார்கள் சாப்பிடும் ஆகாரத்தை எலிகளுக்குக்கொடுத்துச் சோதனை செய்துபார்த்ததில் மேலேகண்ட வளர்ச்சி விவரங்கள் காணப்பட்டன. எலிகள் போன்ற பிராணிகளின் வளர்ச்சி எப்படியோ, அப்படியேதான் மனிதர்களுடைய உடல்வளர்ச்சியு மிருக்கிறதென்று ஸர் ராபர்ட் மெககாரிசன் கண்டுபிடித்திருக்கிறார்.

# செய்தித் திரட்டு.

---

துரிப்புகளும், சமாசாரங்களும்.

செங்கல்பட்டு ஜில்லாவில் சிட்டப்பாக்கத்தில் ஸ்ரீ வி. ஜி. சக்ரபாணி அவர்கள் செல்லூர் நெல் பயிரிட்டார். பல்லிக்கரணி, மேடவக்கம் என்ற இரண்டு கிராமங்களிலுங்கூட பயிரிடப்பட்டது. ஏக்கரா வொன்றுக்கு 2,500 முதல் 3,000 ராத்தல் வரையில் கிடைத்தது. இஜ்ஜாதியைபோல் வேறொன்று ஜாதியும் பலம் கொடுக்கவில்லை.

*　　*　　*

கிருஷ்ணு, கிழக்கு மேற்கு கோதாவரி, வைஸாக் ஜில்லாக்களில் முக்கிய 9 இடங்களில் பழம்வகையராக்களை விற்பதற்காக கோவாபரேடிவ் ஸொஸைடிகள் ஏற்படுத்த அரசாங்கத்தார் உத்தேசித்தது தெரிகிறது. இந்த சொஸைடிகளின் நோக்கங்கள், மா, கினி, வாழை, சபோடா, எலுமிச்சம் முதலிய பழவகைகளை விவசாயிகளின் லாபத்திற்கு விற்பது. ஷை ஜில்லாக்களில் இப்பழங்கள் அதிகமாக பயிராகின்றன.

*　　*　　*

உருளைக்கிழங்குகள் "ஆசா" என்று அரசாங்க முத்திரையுடன் விற்பதாக ஏற்பாடாயிருக்கிறது. பெங்கால், பீஹார், மாகாணங்களில் தயாரிக்கப்படும் உருளைக்கிழங்கு விதைகளும், நீலகிரியில தயாரிக்கப்படும் வெள்ளிக்கிழங்கு விதைகளும், அரசாங்கத்தால் பரிசோதிக்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டு, விவசாயன ஸாகுபடி சட்டத்தின் பிரகாரம் (Agricultural products Act) நடந்து வருகிறது. கிழங்கு விரைகளை மூன்று விதமாக பிறித்ததினுல் (grade) $\frac{1}{10}$ அதிகமாயிற்று. நீலகிரி ஜில்லா விவசாய கோவாபரேடிவ் ஸொஸைடியார் 11800 மணங்கு உருளை கிழங்குகளை ரசம் செய்து அனுப்பியதால் சராசரி $3\frac{1}{2}\%$ அதிகவிலை கிடைத்ததாம்.

*　　*　　*

மதுரை ஜில்லாவிலுள்ள மானுமதுரை பஞ்சாயத்து மார்ச் 29௳ 1941ஷு கூட்டம் நடக்கும்பொழுது வெடி சப்தம் கேட்டது. அது குண்டின் வெடிசப்தம் இதனுல் பொருள் உயிர்சேதம் இல்லை, கூட்டமும் அத்துடன்கலைந்தது. மறு நாள காலை சுவர்களில் எச்சரிக்கை நோட்டீஸ்கள் ஒட்டப்பட்டன. "அதில் நீங்கள் யுத்த நிதிக்காக டிகட்டுகள் விற்கிறீர்கள், ஜாக்கிரதை!" என்று இருந்ததாம். கேஸ் போலீஸாரால் விசாரிக்கப்பட்டு வருகிறது.

*　　*　　*

இம்மாகாணத்தில் $12\frac{1}{2}\%$ அதிகம் நெல் பயிராகு மென்றும் பர்மா அரிசி இறக்குமதிக்கு வஸதிகள் ஏற்பாடாகின்றன என்றும் நினைத்து, விவசாயிகள், வியாபாரிகள் விலை அதிகமாகு மென்று தங்கள் நெல் சரக்கை விற்காமல் வைத்திருக்கிறுர்கள். இதை திருத்த கவர்னமெண்டார் நெல்லின் விலையை நிச்சயிக்கலாம் என்று தெரியவருகிறது.

---

# உங்களுக்குத் தெரியுமா?

---

***மின்சார சக்தி எவ்வளவு உபயோகமானது :—***

மதராஸ் மாகாண அரசாங்கம் 1923-28-ல் இருந்து, நீர்வீழ்ச்சியின் மூலமாக மின்சாரம் எடுத்து, அதிக லாபத்துடன் வியாபாரம் செய்கிறுர்கள். இதுவரையிலும் 3 கோடி ரூபாய் பயன்பட்டிருக்கிறது. இதன்படி வருஷத்திற்கு 40 லட்சம் ரூபாய் நிலவை கிடைக்கிறது. இப்பொழுது, மேட்டூர் ஸ்கீமும், பைகாராவும்

வேலை செய்கிறது. பாபநாசத்திலிருந்து மின்சாரம் கொணர தயாராகிறது. விசாகப்பட்டண ஏஜென்ஸி கோலப் என்ற இடத்தில் மின்சார வியாபாரம் ஆரம்பிக்க எண்ணினார்கள். அது நின்றுவிட்டது. பைகாரா ஸ்கீம் ஆரம்பிப்பதற்கு முன்பு எண்ணெயும் கரியுமாக 8 இயந்திரங்கள் ஓடிற்று. இதற்கு பிறகு 40 இயந்திரங்கள் ஓடிற்று. பைகாராவிலிருந்து வரும் மின்சாரத்தை சுற்றியுள்ள ஊர்களுக்கும், 200 கிராமங்களுக்கும் அனுப்புகிறார்கள். விவசாயத்திற்காக தண்ணீர் அடிக்கும் இயந்திரங்கள் ஏறக்குறைய 1800 இச்சக்தியின் மூலமாய் வேலை செய்கிறது. கோயம்பத்தூர் ஜில்லாவில் இச்சக்தியில் பாதி பாகம் மில்களில் இயந்திரங்களை ஓட்டுவதற்கும், மற்ற பாதி விவசாயத்திற்கும், வீடுகளுக்கும் உபயோகப்படுகின்றது. மின்சார சக்தியை எவ்வளவு கிராமங்களுக்கு அனுப்பக்கூடுமோ அவ்வளவு கிராமங்களுக்கும் அனுப்பவேண்டு மென்பது மதராஸ் அரசாங்கத்தின் நோக்கம். வைஸாக், பெஜவாடாவில் மின்சாரத்தை சேர்த்து, கிராமங்களுக்கு அனுப்பும் ஸ்டேஷன்கள் தயாராகின்றன. விசாகப்பட்டணம் தனக்குமாத்திரம் மின்சாரத்தை கொடுத்துக் கொள்கிறது. ஆனால் பெஸவாடா மூன்று ஜில்லாக்களுக்கு கொடுக்கிறது. 1941-42-ல் அரசாங்கம் 36 லக்ஷம் ரூபாய் மூலதனத்துடன் ஸ்டேஷன்கள் கட்டுவதாக நினைத்திருக்கிறது. பஞ்சாயத்துகளும் விவசாயிகளும் மின்சாரத்தின் உபயோகத்தை அறிந்து அதற்காக நின்றால், வீட்டு வேலைகளுக்கும், விவசாயத்திற்கும், மில் வேலைக்கும் மின்சாரத்தை உபயோகித்து, கிராமத் தொழிலை முன்னடைவிக்கலாமென்று பெரியோர்களுடைய உத்தேசம்.

* * *

உலகத்திலிருக்கும் தங்கம் எங்கு செல்கின்றது.

யுத்த காலத்தில் ஜனங்களுக்கு கஷ்டங்கள் அதிகம். சண்டையில் ஈடுபட்டுள்ளவர்கள் மற்றவர்களிடமிருந்து சாமான் வாங்க தங்கம் கொடுக்க நேரிடும். நம் தேசம் சண்டை செய்யாவிடினும், பிரிட்டிஷ் சர்கார் தேசத்தின் பாகமானதால் சண்டைக்கு உதவி செய்யவேண்டும். நம் தேச தங்கமும் ஏற்றுமதியாக வேண்டும். இந்த தங்கங்களெல்லாம் எங்கு செல்கின்றன? அமெரிக்காவிலுள்ள தங்கம் எவ்வளவு என்று யூகிக்க முடியுமா? 6,500 கோடி ரூபாய் விலையுள்ள தங்கமிருக்கின்றதாம். இது தவிர உலகத்திலுள்ள எல்லா தேசங்களிலும் 3,900 கோடி ரூபாய் விலையுள்ள தங்கம் தயாகின்றது. இதில் முக்கிய பாகம் அமெரிக்காவிற்கு செல்கின்றது. மற்ற தேசங்களில் தங்கமில்லாவிட்டால், அத்தேசத்துவாசிகள் பொருள்களை மாற்றுதல் மூலமாக வியாபரம் செய்வதாக சொல்லுகிறார்கள். சிலர், இவ்வளவு தங்கம் அமெரிக்காவில் இருப்பதால் அதற்கு மதிப்பிருக்குமோ என்று ஆமோதிக்கிறார்கள். அமெரிக்கா தேசத்து பாங்கர்கள் ஷை பிரஸ்தாபத்தை பற்றி ஆலோசனை செய்கிறார்கள்.

* * *

துணி அணிவதை நாம் எப்படி முன்கொண்டு வருகிறோம்!

இந்த ஸகாப்தத்தில் முன் ஐந்து வருஷங்களில் துணி அணிவது கணக்கிட்டால் மனிதனொருவன் $11\frac{1}{2}$ கஜம் அணிவதாக தெரிகிறது. 1935-40 வருஷ கணக்கு மனிதனொருவன் $16\frac{1}{2}$ கஜம் துணி அணிவதாக தெரிவிக்கின்றது. முன்பைவிட இப்பொழுது மனிதன் $1\frac{1}{2}$ பங்கு துணி உடுத்திக்கொள்கிறான். கையால் நூற்ற துணியை எவ்வளவு பெருமை படுத்தியும் முன்பு 28% ஆக இருந்தது இப்பொழுது 27% ஆக குறைந்துவிட்டது. அதாவது மில் துணிகளின்மீது நமக்கு ஆசை அதிகமாயிற்று. அப்படியிருந்து கையால் நூற்ற நூல் முன்பைவிட அதிகமாக நூற்கப்படுகிறது. 1901-05-ல் ஒருவன் $3\frac{1}{4}$ கஜம் நூற்றது இப்பொழுது $4\frac{1}{2}$ கஜமாகிவிட்டது. இக்காரணங்களால் அணியும் துணியில் 7 2% கையால் நூற்றதாக இருக்கிறது. மில் துணிகளைவிட கதர் அதிகமாகாவிடினும், மொத்தத்தில் அதிகமாகிறது. இதனால் 40-50 லக்ஷ ஜனங்களுக்கு ஜீவனம் நடக்கிறது.

# பஞ்சாயத்து செய்திகள்.

### நிர்மாணங்கள்.

வைசாக் ஜில்லா, பாலகுண்ட தாலூக்கா, கொமேரா பஞ்சாயத்து போர்ட்டு, மெம்பர்களின் தொகை 9, பிரத்தியேக சீட்டு 1 ஷெ.; குண்டூர் ஜில்லா, நர்ஸராவ் பேட்டை தாலூக்கா, நாதென்ட்ல பஞ்சாயத்து போர்ட், மெம்பர்களின் தொகை 15, பிரத்தியேக சீட்டு 1 ஷெ., 1 மு.; பலநாடு தாலூக்கா, புலிபாடு பஞ்சாயத்து போர்ட், மெம்பர்களின் தொகை 14, பிரத்தியேக சீட்டு 1 ஷெ., 1 மு., 1 கி.; கர்நூல் ஜில்லா, கம்பம் தாலூக்கா, சாகர்லா பஞ்சாயத்து போர்ட், மெம்பர்களின் தொகை 12, பிரத்தியேக சீட்டு 1 ஷெ., 1 மு.; கிழக்கு கோதாவரி ஜில்லா, ராஜஹ்ல் தாலூக்கா, ராவுலபாடு பஞ்சாயத்து போர்ட் (ராவுல்பாடு, புரிடிவாடி குளம், மள்ளதொட்டி) மெம்பர்களின் தொகை 9, பிரத்தியேக சீட்டு 2 ஷெ.; ராமனுதம் ஜில்லா, சாத்தூர் தாலூக்கா, வல்லியூர் பஞ்சாயத்து போர்ட் (வல்லியூர், குமாரலிங்காபுரம், சுந்தரலிங்காபுரம்) மெம்பர்களின் தொகை 8, பிரத்தியேக சீட்டு 1 ஷெ.; செங்கல்பட் ஜில்லா, சைதாப்பேட்டை தாலூக்கா, கிழக்கு தாம்பரம் பஞ்சாயத்து போர்ட் (சலேயூர் ரிவின்யூ கிருமத்து பாகம்), மெம்பர்களின் தொகை 8.

### எடுக்கப்பட்டது.

தெற்கு கனரா ஜில்லா, புத்தூர் தாலூக்கா, ஷிரதி பஞ்சாயத்து போர்ட் சரியாகவேலை செய்யாததினால்; வட ஆர்காட் ஜில்லா, சையர் தாலூக்கா சிருவெலய நல்லூர், ஆதாயம் குறைவானதாலும், சரியாகவேலைசெய்யாததாலும்; கிமிரி பஞ்சாயத்து போர்ட், மதுரை ஜில்லா, திருமங்களம் தாலூக்கா, சப்டூர் பஞ்சாயத்து போர்ட், ஊரார்கள் பஞ்சாயத்து வேண்டா மென்றதாலும், எடுக்கப்பட்டன. நெல்லூர் ஜில்லா, புச்சிரெட்டிபாளயம் 25 உ மார்ச்சுமீ 1941 ஹு விருந்து ஒரு வருஷம் ரத்தாகிவிட்டது.

### ரத்து வருஷம் அதிகமானது.

குண்டூர் ஜில்லா, படைல பஞ்சாயத்து போர்ட், 23உ எப்ரல் மீ 1941 ஹு விருந்து மற்றொரு 6 மாதம்; மதுரை ஜில்லா, அல்லி நகரம் பஞ்சாயத்து ஷை போல ஆறு மாதம்; குண்டூர் ஜில்லா, சேவலி பஞ்சாயத்து போர்ட், செங்கல்பட் ஜில்லா, திருவள்ளூர் பஞ்சாயத்து போர்ட், செம்பியம் பஞ்சாயத்து போர்ட், இம் மூன்றும் 30உ எப்ரல் மீ 1941 ஹு விருந்து 6 மாதமாக செய்யப்பட்டது.

### கிறமங்கள் எடுக்கப்பட்டன.

கிழக்கு கோதாவரி ஜில்லா, லக்ஷ்மிபோலவரம் பஞ்சாயத்து போர்ட்டிலிருந்து, ராவுலபாடு, பூரேடிவாரிகுளம்; சலயூரு பஞ்சாயத்து போர்டிலிருந்து, ரிவின்யூ கிலங்கள் எடுக்கம்பட்டன.

### காரியதரிசி மாற்றல்.

*ராமனாத ஜில்லா, சாத்தூர் தாலூக்கா, வெரிய பொத்தல்பட் பஞ்சாயத்து போர்ட் காரியதரிசி ஸ்ரீ கருப்பண்ணன் சுயேச்சை கரிணத்தினால் அநியாயமாய் உபாத்தியாயர்களை கஷ்டப்படுத்தினதாலும், ரூ. 1-5-6 சரியாக விவரமில்லாமல் செலவழித்ததாலும், நிலவரி போர்டை அடைந்தும் கணக்கில் எழுதாததாலும், கூட்டங்களை, சரியாகவும் கிரமமாகவும் நடத்தாததாலும், தள்ளப்பட்டார்.*

---

### ப்ளேசஸ் ஆப் பப்லிக் ரீஸோர்ட் ஆக்ட்.

*தென் ஆர்காடு ஜில்லா, சங்காரபுரம் பஞ்சாயத்து போர்டுக்கு, மதுரை ஜில்லா' திருப்பரன் மந்தரம் தாலூக்கா, பஞ்சாயத்து போர்டிற்கு ஆதிக்கம் கொடுக்கப் பட்டது.*

---

### ஜெனரல் முனிசிபல் ஆக்ட்.

*ஸெக்ஷன் 97 இதில் சம்மந்தப்பட்டவரைக்கும் ஸெக்ஷன் 313 ஷெ. 7, மதுரை ஜில்லா, கம்பம் பஞ்சாயத்து போர்டிற்கும்; திருச்சி ஜில்லா, கள்ளகுடி பஞ்சாயத்து போர்டிற்கு; நெல்லூர் ஜில்லா, கூடூர் பஞ்சாயத்து போர்டிற்கும், குண்டூர் ஜில்லா, குரி ஜால பஞ்சாயத்து போர்டிற்கும், ஸெக்ஷன் 269 அந்து சம்பந்தப்பட்டவரைக்கும், ஸெக்ஷன் 313 ஷெ. 7, திரிச்சி ஜில்லா, செட்டி கூட்டம் பஞ்சாயத்து போர்டிற்கும்; ஜெய கொண்டன் பஞ்சாயத்து போர்டிற்கும், ஆதிக்கம் கொடுத்தார்.*

---

# அரசாங்க உத்தரவுகள்.

---

ஜி. ஓ. நே. 766, எல். ஏ, (20-3-1941).

*நூறு ரூபாய்க்கு, குறைவாக செய்ய வேண்டிய வேலைக்கு டெண்டர்கள் அனுவசியம் என்று எந்த பஞ்சாயத்து போர்டும் நிர்ணயிக்கக் கூடும். நூறு ரூபாய் களுக்கு மேல் செய்யவேண்டிய வேலைக்கு, டெண்டர்களை கூப்பிட்டு, கமிட்டியின் இஷ்டப்படி காரியதரிசி, குறைவான டெண்டருக்கு அவ்வேலைக்கு கொடுக்க வேண்டும், எந்த காரணத்தினாலாவது குறைந்த டெண்டருக்கு கொடுக்காவிட்டால், ஆடிட் எடுக்கும் சமயத்தில் காரணம் சொல்ல வேண்டும். குறைந்த டெண்டரை ஒப்புக்கொண்டு, ஆனால் அவன் செய்யக்கூடிய காரியங்களில் சந்தேகமேற்பட்டால், அவனிடமிருந்து ஸெக்யூரிடி பெற்றுக்கொண்டு வேலையை நடத்தலாம் குறைவான டெண்டர் இருந்தும், பெரிய காரணங்கள் இல்லாமல் பெரிய டெண்டரை ஒப்புக் கொள்ளக்கூடாது. டெண்டரில் சொல்லப்பட்ட விலையை டெண்டர்கள் மாற்றக் கூடாது. டெண்டரை திறந்த உடன் வேலையை கூடிய சீக்கிரம் முடித்துவிட வேண்டும்.*

---

# மதராஸ் ப்ரோவின்ஷியல் கோவாபரேடிவ் பாங்க், லிமிடெட்.

(1912 வருடம் II-வது ஆக்ட் ஆகிய 1932 வருடம் VI ஆக்டின்கீழ் ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.)

தலைமை ஆபீஸ்.

சைனா பஜார் ரோட், மதராஸ். போன் நெ. 2390.

மைலாப்பூர் பிராஞ்சு :

லஸ் சர்ச் ரோட், மைலாப்பூர், போன் நெ. 3334.

எழும்பூர் பிராஞ்சு:

ஹிப்ராஹிம் காலனி, எழும்பூர், போன் நெ. 8510.

சைதாபேட்டை பிராஞ்சு :

38, காரிணீஸ்வரர் கோயில் தெருவு, சைதாப்பேட்டை.

பிரசிடெண்டு :

ஆனரபிள் மிஸ்டர். வி. ராமதாஸ் பந்துலு.

ஸெக்ரடேரி :

டி. ராகேந்திர ராவ்.

இந்த நாட்டிலிருக்கும் விவசாயிகளுக்கு பொருப்பு சம்பாதித்துக் கொடுப்பதில் இந்த பாங்கு முக்கிய ஸ்தாபனமாகும்

இந்த பாங்கு மதராஸ் கார்பரேஷனுக்கும், மதராஸ் யூனிவர்ஸிடி அண்ணாமலை, ஆந்திரா யூனிவர்ஸிடிகளுக்கும், மற்ற லோகல் போர்டுகள் டிஸ்டிரிக்ட் முனிசிப்பாலிடிகளுக்கும் பாங்காக இருக்கின்றது.

விதிகள், வியாபார நிபந்தனைக்கும் கீழ்கண்டவருக்கு எழுதவும்:

செக்ரடரி,
தலைமை ஆபீஸ்
அல்லது
பிராஞ்சுகள்.

---

வெளியிட்டவர், பிரசுரகர்த்தா, மிஸ்டர். வி. வியன்னா, பி.ஏ., பி.எல்.,
187, ராயப்பேட்டை ஹைரோட், ராயப்பேட்டை, மதராஸ்.

மதராஸ் மவுண்ட் ரோட் நெ. 1/17 ல் அமைந்திருக்கும்
சென்ட்ரல் கோவாபரேடிவ் அச்சுக்கூடத்தில்
மிஸ்டர் ஆர். கிருஷ்ணமாச்சாரி, பி. ஏ., அவர்களால் பதிப்பிக்கப்பட்டது.